# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 50 International Editor : MICHAEL. W. SMITH இதழ் - 50


## பத்து கன்னிகைகள்

(மத்தேயு 25 : 1 – 13)
இயேசு பத்து கன்னிகைகள் பற்றிய உவமையின் மூலம் ஆவிக்குரிய ஆயத்தம் மற்றும் தற்பரிசோதனையை குறித்து வல்லமையான செய்தியை நமக்கு அறிவித்திருக்கிறார். இயேசுவின் இரண்டாம் வருகையானது கல்யாணத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தம் மணவாட்டி சபையை சேர்த்துக் கொள்ளும்படி வருகிறார். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு நம்மை ஆயத்தம் பண்ணும் படியாக விழிப்போடும் எச்சரிக்கையோடும் இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் உவமை பத்து கன்னிகைகள், மணவாளனை சந்திக்கும்படி தீவட்டிகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டு போனார்கள். ஐந்து பேர் புத்தி உள்ளவர்கள். மற்ற ஐந்து பேர் புத்தி இல்லாதவர்கள்.
ஆயத்தமாகுதலே இந்த இரண்டு விதமான கன்னிகைகளுக்கும் இடையிலான முதல் வித்தியாசம். எப்படி எனில் புத்தியுள்ள கன்னிகைகள் தீவட்டிகளுக்கு தேவையான எண்ணெயையும் கூட எடுத்துச் சென்றனர். புத்தி இல்லாதவர்களோ எண்ணெயை எடுத்துச் செல்லவில்லை. மணவாளனுடைய வருகையை எதிர்நோக்கி காத்திருந்து தாமதமானதால் சோர்ந்து போய் நித்திரையாகி விட்டார்கள். நடுராத்திரியிலே மணவாளன் வந்து விட்டார், சந்திக்க புறப்படுங்கள் என்ற சத்தம் உண்டாயிற்று.
புத்தியுள்ள கன்னிகைகளோ தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். புத்தி இல்லாதவர்களின் தீவட்டிகளோ எண்ணெய் இல்லாமல் அணைந்து போயிற்று. அவர்கள் கலக்கமடைந்து புத்தி உள்ளவர்களை நோக்கி உங்கள் எண்ணெயிலே கொஞ்சம் தாருங்கள் என்றனர். புத்தி உள்ளவர்கள் பிரதியுத்திரமாக நீங்கள் போய் கடையில் வாங்கிக் கொள்ளுங்கள் என்றனர். அப்படியே அவர்கள் வாங்க சென்றபோது இதோ மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்த கன்னிகைகளோ மணவாளனுடைய கல்யாண விருந்துக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது.புத்தி இல்லாத கன்னிகைகளோ திரும்பி வந்து கர்த்தாவே கர்த்தாவே எங்களுக்கு திறக்க வேண்டும் என்றனர். மணவாளன் பிரதியுத்திரமாக நிச்சயமாக உங்களை அறியேன் என்றார். இயேசு இந்த உவமையை முடிக்கும் போது மனுஷகுமாரனுடைய வருகையின் நாளையும் நாழிகையும் அறியாததினால் விழித்திருங்கள். இந்த நாளை அறியாததினால் நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.



வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு உவமையின் வாயிலாகவும் தெளிவான வேத சத்தியத்தை அறிந்து கொள்ளலாம். பத்து கன்னிகைகள் என உவமையில் சொல்லப்பட்டுள்ளவர்கள் அவிசுவாசிகள் அல்ல, சாதாரண உலக ஜனங்களாகிய நாம் கரைதிரை இல்லா பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, தேவனை பயபக்தியோடு ஏற்றுக் கொண்டவர்கள் தான். ஆனாலும் புத்தியுள்ளவர்களுக்கும், புத்தி இல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது யாதெனில் நம்மில் 50 சதவீத கிறிஸ்தவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவர். மேலும் இது நமக்கு ஒரு எச்சரிக்கை. ஆவிக்குரிய எழுப்புதலை அடைய நம்மை ஆயத்தப்படுத்த ஏதுவாகிறது. புத்தி இல்லாதவர்கள் காத்துக் கொண்டிருக்க, புத்தி உள்ளவர்களோ மணவாளனை எதிர்கொண்டு போக ஆயத்தமாகி விட்டார்கள்.
மணவாளன் வர தாமதித்த போது கன்னிகைகள் அயர்ந்து நித்திரையாகி விட்டனர்.

**நடுராத்திரியிலே இதோ மணவாளன் வந்துவிட்டார் .அவரை சந்திக்க ஆயத்தப்படுங்கள் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று**


| தலையங்கம் | வேதபாடம் நீதி | துணை கட்டுரை நீதியின் சால்வை | கேள்வி பதில் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை துன்பத்தில் துதி பாடல் |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5-6 | 7 | 8 |

## வேதாகமம், நமக்கு போதிப்பது என்ன..... ?




**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28 ,29; 2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19; 2 கொரி 3 :17

**சுவிசேம் அறிவித்தல்**
மாற் 16:15

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கின்ற கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய மன நிறைவு பெற்று சோர்ந்து போகிறோம். ஒருவித அக்கறை, சலனம், கவனச்சிதறல் இவை எல்லாம் நிறைந்ததுதான் உலக வாழ்க்கை. ஆவிக்குரிய ஆயத்தத்தில் நிதானமில்லாமல் இருப்பதற்கு காரணம் கிறிஸ்துவின் வருகை தாமதமாகுவது புத்தி இல்லாத கன்னிகைகளும் இப்படித்தான் இருந்தார்கள். தாங்கள் எண்ணையையோ கூட கொண்டு வரவில்லை. எண்ணெய் என்பது கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் இருப்பதை காட்டுகிறது.



புத்தியுள்ள கன்னிகைகள் தாங்கள் தீவட்டிகள் அணைந்து போகாமல் இருக்கும்படி எண்ணையை கையில் கொண்டு போனார்கள். அவர்களுக்கு தேவனோடு உள்ள உறவு பாதிக்கப்படாமல் எப்பொழுதும் பிரகாசமாய் இருந்தது. இருளான உலகில் பரிசுத்த ஆவியானவரோடு தங்கள் கொண்ட ஆழமான விசுவாசத்தின் மூலம் உறுதியாக நிலைத்து நிற்க முடிந்தது. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்குள் வந்து கன்னிகைகள் உட்பிரவேசித்தார்கள்.

கல்யாண விருந்து என்பது கடைசி நாளில் கிறிஸ்துவுக்கும் சபைக்குமான உறவை வெளிப்படுத்துகிறது. கதவு அடைக்கப்பட்டபின் ஒருவரும் உள்ளே பிரவேசிக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பிலே, இரண்டாம் வருகையில் நடக்கும் இயேசு வந்த பிறகு, ஜெபிக்கவோ நம்மை சுத்திகரிக்கவோ எழுப்புதல் பெறவோ காலம் நேரம் சமயம் கொடுக்கப்பட மாட்டாது. இன்னொரு வாய்ப்பு என்பது இல்லை.

புத்தி இல்லாத கன்னிகைகளுக்கு மணவாளனுடைய பதில், உங்களை அறியேன். வெளிப்புற விசுவாச வாழ்வை விட உள்ளார்ந்த ஆவிக்குரிய வாழ்வுதான் பலன் அதிகம். புத்தி இல்லாத கன்னிகைகளுக்கு தேவபக்தியிருந்தது. ஆயினும் ஆவிக்குரிய ஆயத்தமும், தேவனோடு உள்ள ஐக்கியமும் குறைவுபட்டதால் கைவிடப்பட்டனர். ஒரு விதமான தேவபக்தி காணப்பட்டாலும் ஆவிக்குரிய அனல் இல்லாதிருந்தார்கள்.

ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய ஆயுதத்தை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நீங்கள் புத்தியுள்ளவர்களா? புத்தி இல்லாதவர்களா ? பரிசுத்த ஆவி என்னும் எண்ணெயால் நீங்கள் அபிஷேகிக்கப்பட்டு இருக்கிறீர்களா? கவனம் இல்லா என் ஆத்துமாவே ஆவிக்குரிய முடக்கத்திலிருந்து எழுந்து தேவனுடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாவோம்.

செய்தியின் முக்கியத்துவம் என்னவெனில் விழித்திருங்கள். ஆயத்தமாயிருங்கள். ஏனெனில் கிறிஸ்துவின் வருகை இந்த நாளில் சம்பவிக்கும் என்று நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்படுங்கள். இன்றே இரட்சண்ய நாள். எப்பொழுதும் காலங்கள் இப்படியே இருப்பதில்லை. கடைசி அழைப்பு வரும்போது கதவு அடைக்கப்படும். மணவாளனை சந்திக்க ஆயத்தமா? இன்றே அதற்கான நேரம். ■

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**ஆயர்.W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு,
கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி – நீதிமொழிகள் 14 : 34

எபிரெய மொழியில் இறையியல் சார்ந்த மிக முக்கியமான, ஒரு சத்தியத்தை இந்த நீதிமொழிகள் நமக்கு காண்பிக்கிறது. நீதியையும், ஒழுக்கத்தையும், எந்த தேசம் பாதுகாக்கிறதோ, அந்த தேசத்தை தேவன் ஆசீர்வதிப்பார். அதேபோல பாவமோ தேசத்திற்கும் தனி மனிதருக்கும் இகழ்ச்சியை கொண்டு வரும். பாவமும் அநீதியும் பரவலாக காணப்படும் இந்த உலகில் நீதி நித்திய கிருபையுடன் இரக்கம் செய்யும் தேவனாலே பாவத்தை மேற்கொள்ள முடியும்.

இந்த இதழில் நீதியின் சால்வையை குறித்து பார்க்கலாம். மிஷெனரி பணித்தளத்தில் ஒருவிசை கர்த்தர் கிறிஸ்துவின் மணவாட்டியைக் குறித்து ஒரு தரிசனத்தை எனக்கு காண்பித்தார். அந்த தரிசனத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியாக சபையின் பரிசுத்தம், சிங்காரத்தோற்றம் பிரகாசத்தைக் குறித்து நான் பிரமித்தேன். இந்த சத்தியத்தை வாசிக்கிற ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உண்மையான நீதி வெளிப்படட்டும். வார்த்தையில் செய்யக்கூடாததை பரிசுத்த ஆவியானவரே கிரியை செய்து உணர செய்யட்டும்.

சபையாகிய மணவாட்டி, கற்புள்ள கன்னிகையாகிய பரிசுத்தத்தினாலும், நீதியினாலும் தன்னைக் காத்துக்கொண்டு கிறிஸ்துவின் வருகைக்கு தன்னை ஆயத்தப்படுத்த வேண்டும். சபை என்பது தனிப்பட்டதல்ல. மாறாக விசுவாசிகளால் நிறைந்த கூட்டம். ஆகவே அந்த கூட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் நீதியின் சால்வையை அணிந்து கொள்ள வேண்டும். உலகப் பிரகாரமான பாவ வழிமுறைகள், இன்று சபையின் பரிசுத்தத்தை பாழாக்கி கொண்டிருக்க, அநேக விவாதங்கள் நமக்குள் எழும்ப மணவாட்டியாகிய நாம் கிறிஸ்துவின் தெய்வீக பார்வையில் எப்படி இருக்கிறோம்? ஒரு விசை நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நம்மில் இருக்கும் எண்ணங்கள் குறைவுகள் பாரம்பரியங்கள் எல்லாவற்றையும் கடந்து இதயக்கதவை முற்றிலும் திறந்து நீதி வெளிப்படும்படியாக தேடுவோம்.

நம் இதயத்திலும் நம் வாழ்விலும் தேவனுடைய சித்தம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு சபைக்குள் அங்கத்தினராக இணைந்துள்ளோம். ஆகையால் எப்படிப்பட்ட நடக்கையோடு நாம் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். தேவ நீதியோடு நாம் காரியங்களை எதிர்கொள்ளும்போது, எல்லா எதிர்மறையான விவாதத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும். கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை எல்லாவற்றையும் விட்டு நீங்கி, கிறிஸ்துவின் மணவாட்டியாக தேவனை பிரியப்படுத்த நம்மை அர்ப்பணிப்போம்.

நீதிக்கு திரும்பி நம் வாழ்வை தேவனுடைய பரிசுத்தத்திற்கு நேராக ஒப்புக்கொடுத்து தனித்துவமாக வாழ முயற்சிப்போம். நாம் அனைவரும் மிக நேர்த்தியானவர்கள் அல்ல. ஆனால் நம்முடைய நோக்கம் பரிசுத்த ஆவியானவர் நம்மை செவ்வைப்படுத்தி, கிறிஸ்துவைப் போல மாற செய்ய வேண்டும். சிறிய அளவிலான அழுக்கு பாத்திரத்தின் முழு தண்ணீரையும் கெடுத்துப்போடும். அதுபோல ஒரு சிறிய அநீதி ஆவிக்குரிய வாழ்வில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

பரிசுத்த மணவாட்டியாய், நீதியுடன் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ்வோமாக.

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**

## அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?

(1 கொரிந்தியர் 6 : 9 -10)

| | | | |
|---|---|---|---|
| *வேசி மார்க்கத்தார்* | *விபச்சாரக்காரர்* | *திருடர்* | *பொருளாசைக்காரர்* |
| *வெறியர்* | *ஆராதனைக்காரர்* | *சுய புணர்ச்சிக்காரர்* | *கொள்ளைக்காரர்* |

**நீதி இல்லாமை**



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : நீதி

**வேத வாசிப்பு :**
நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்.சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. வெளி 19 : 7-8

**வரையறை :** நீதி என்பது நியாயமான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழ்வது. பாவத்தினின்று விடுதலையாக்கப்படுதல் தேவன் நியமித்த பிரகாரமாக வாழும் ஒரு மனுஷன் பரிசுத்தம், நேர்மை, ஒழுக்கம், நியாயம், சரியான சிந்தனை, உணர்வு உடையவன்

**செய்திச் சுருக்கம் :** சபை என்பது மணவாளனுக்காக காத்துக் கொண்டிருக்கும் மணவாட்டியை போன்றது.மணவாட்டியானவள் வெண்மையான நீதி எனும் சால்வையை தரித்திருக்க வேண்டும். தேவபிள்ளைகள் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நீதியின் வாழ்வோடு ஆயத்தமாக கடவோம்.

---

### I.கிறிஸ்துவின் மணவாட்டி

A. வெளி 21 : 1-2 புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டி

B.வெளி 21 : 9-11 ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி

C.எபேசியர் 5 : 25-27 கறைதிரை இல்லாமல்

D.2கொரி 11 : 2 கற்புள்ள கன்னிகை

### II. பரிசுத்தவான்களுடைய மெல்லிய வஸ்திரம்

A.வெளி 19 : 7-9 மெல்லிய வஸ்திரம் என்பது நீதி

B.வெளி 3 : 4-5 வெண்வஸ்திரம் தரிக்கப்படும்

C.வெளி 7: 9 வெள்ளை அங்கிகளைத் தரித்து

### III. நீதியோடு கர்த்தரை தொழுதுகொள்ளுங்கள்

A.லூக் 1 : 74 – 75 நீதியோடு கர்த்தரை சேவியுங்கள்

B.1 யோவான் 3 : 6 – 8 அவரில் நிலைத்திருக்கிற எவனும்

C.ரோமர் 6 : 18-19 நீதிக்கு அடிமைகளானீர்கள்

D.1கொரி 6 : 9-10 அநியாயக்காரரின் செயல்கள்

### IV.நீதிக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்

A.மத் 6 : 33 அவருடைய நீதியை தேடுங்கள்

B.1 தீமோ 6 : 11 நீதியை அடையும்படி நாடு

C.எபேசி 4 : 24-25 மெய்யான நீதியில் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷன்

### V. விசுவாசத்தினால் மாத்திரமே நியாயப்பிரமாணத்தினால் அல்ல

A. கலா 2 : 16 நியாயப்பிரமாணத்தினால் அல்ல

B.ரோமர் 5 : 1 விசுவாசத்தினால்

C.ரோமர் 5 : 18 -21 இயேசுகிறிஸ்து ஒருவராலே நீதியின் ஈவு

### VI.சுயநீதியினால் அல்ல

A.பிலி 3 : 7-9 சுயநீதியை உடையவனாயிராமல்

B.ரோமர் 10 : 3-4 தங்கள் சுயநீதியை நிலைநிறுத்த தேடுகிறபடியால்

C.ஏசாயா 64 : 6 எங்கள் நீதி அழுக்கான கந்தை

D.தீத்து 3 : 5 நீதியின் கிரியையினிமித்தம் அல்ல

E.மத் 5 : 20 பரிசேயருடைய நீதியிலும் அதிக நீதி

F.மத் 23 : 27-28 புறம்பே காணப்படுகிறீர்கள்

### VII.நீதியின் உபதேசம்

A. 1 கொரி 15 : 34 நீதிக்கேற்ப விழித்துக்கொண்டு

B.2 தீமோ 3 : 16 நீதியைப் படிப்பிக்குதலுக்குப் பிரயோஜனம்

C.ஏசா 28 : 17 நியாயத்தை நூலும் நீதியை தூக்குநூலும்

D.1கொரி 6 : 9-10 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

### VIII. மணவாட்டிக்கும் வேசியான ஸ்திரீக்குமான வேறுபாடு

A.வெளி 12 : 1 ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள்

B.வெளி 17 : 1- 6 மகா வேசி

C.ஏசாயா 1 : 21-22 உண்மையுள்ள நகரம் எப்படி வேசியாய்ப் போயிற்று

### IX.நீதியின் வாக்குத்தத்தங்கள்

A.1பேது 3 : 12 அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்கு கவனமாயிருக்கிறது

B.அப் 10 : 35 அவருக்கு உகந்தவன்

C.1பேது 3 : 14 நல்மனசாட்சி

D.மத் 5 : 6 பாக்கியவான்கள்


E.2தீமோ 4 : 7-8 நீதியின் கிரீடம்

### X.கறைதிரை இல்லா வஸ்திரம்

A.2பேது 3 : 10-11 எப்படிப்பட்ட நடக்கையும் தேவபக்தியும்

B.2 பேது 3 : 14 கறைதிரை இல்லாமல் குற்றமற்றவர்களாய்

**முடிவு :**
நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். -1 யோவான் 1 : 9



# நீதியின் சால்வை

**மணவாளனாகிய இயேசு கிறிஸ்து தன்னை எதிர்நோக்கி காத்திருக்கிற அழகான மணவாட்டியை என்றென்றும் நித்திய நித்திய காலமாய் தன்னோடு சேர்த்துக் கொள்ளும்படியாக வருகிறார். அலங்கரிக்கப்பட்ட வெண்மையான ஆடையணிந்து சிங்காரமாய், மகிழ்ச்சியோடு காத்திருந்த மணவாட்டியின் காத்திருக்குதல் முடிவுக்கு வந்தது.**

**பரிசுத்தவான்களின் நீதி இயேசுகிறிஸ்து சிந்திய இரத்தத்தினாலும் பரிசுத்தஆவியின் வல்லமையினாலும் சாத்தியமாயிற்று**

## கிறிஸ்துவின் மணவாட்டி

தேவசபையை மணவாட்டியாக காண்பிக்கும்படி யோவான் ஒரு தரிசனத்தை காண்கிறார். யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. வெளி 21 : 2 அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியை போல எருசலேம் காணப்படுகிறது. வசனம் 9ல் ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்கு காண்பிக்கிறேன் என்று சொல்லப்பட்டுள்ளது. சபையாகிய மணவாட்டியும் கிறிஸ்துவுக்காக அலங்கரிக்கப்பட வேண்டும். கிறிஸ்து சபையை நேசிக்கிறார். தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்கு கிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். எபேசியர் 5 : 26 -27, நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன். 2 கொரிந்தியர் 11 : 2 ல் பவுல் குறிப்பிடுகிறார். குருடாக்கப்பட்ட ஒவ்வொருவருடைய மனக்கண்களையும் தேவன் திறந்தருள்வாராக மணவாட்டி கன்னிகையைப் போல, சபையும் கிறிஸ்து ஒருவர் பேரில் பற்றுதலாக இருக்க வேண்டும். தேவகுமாரன் தம்முடைய மனவிருப்பத்தின்படி சபையின் மேல் பிரியம் வைக்கிறார்.

## ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம்

கிறிஸ்துவுக்கும், சபைக்குமான கடைசி ஐக்கியத்தை கலியாணத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே வெளி 19 : 7 – 8.

மணவாட்டியை குறித்து. நீதி என்பது உள்ளார்ந்த குணாதிசயம். அது கர்த்தரால் அங்கீகரிக்கப்படும். ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியும் தேவனை பிரியப்படுத்தும் விதமாய் தன்னை ஆயத்தம் செய்ய வேண்டும். பரிசுவான்களுடைய நீதியானது, தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்து பல கிறிஸ்தவர்கள் இன்று உலக சிற்றின்பங்களினாலும் தங்களை பாவத்திற்கு உட்படுத்தி கறையாக்கி கொள்கின்றனர். ஆனால் தேவபக்தியுள்ளவர்களோ பரிசுத்தமாய் தங்களை காத்துக் கொள்கிறார்கள். ஆகவேதான் அவர்களுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படுகிறது (வெளி 3 : 4 – 5) . மாசற்ற தன்மையின் அடையாளம் வெள்ளை அங்கிகளை தரித்தவர்கள் ஆட்டு குட்டியானவருடைய சிங்காசனத்துக்கு முன்பாக நிற்க பாத்திரவான்கள் வெளி 7 : 9

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்

இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி பலியாக்கப்பட்டதின் நிமித்தமே, இன்று அவருடையவர்கள் பரிசுத்தத்தோடும், நீதியோடும், ஊழியம் செய்ய முடிகிறது. லூக் 1 : 75 உண்மையான நீதி வெளிப்புறத் தோற்றத்தில் அல்ல, உள்ளான இருதயப் பரிசுத்தத்தில் இருந்து வெளிப்படும். 1 யோவான் 3 : 6 – 8 தெளிவாக கூறுகிறது அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ் செய்கிறதில்லை. ஏனெனில் பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்க தேவகுமாரன் வெளிப்பட்டார். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.
உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். ரோமர் 6 : 18– 19



பரிசுத்தத்திற்கு அழைக்கப்படுதல் இவைகளை உள்ளடக்கியது - ஆவி, உள்ளம், எண்ணம் செயல்கள், வார்த்தை...

## நீதிக்கு அழைக்கப்படுதல்

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியும் தேடுங்கள் மத் 6 : 33 நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. 1 தீமோத்தேயு 6 : 11. மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன் (எபேசி 4 : 24- 25) .

சபைகளுக்கான பவுலின் வார்த்தைகள் இன்று பிரத்தியட்சமாய் இருக்கிறது. 1கொரி 15 : 34 நீதிக்கேற்க விழித்துக் கொள்ளுங்கள் என்கிறார். ஆவிக்குரிய நித்திரையினால் நம்முடைய வஸ்திரங்கள் கறைபடிந்துள்ளது. நீதியையும், அநீதியையும் தெரிந்து கொள்ளுங்கள். 2 தீமோ 3 : 16 ல் வேத வாக்கியங்கள் எல்லாம் நீதியைப் படிப்பிக்குதலுக்கு பிரயோஜனமுள்ளதா யிருக்கிறது ஏசாயா 28 : 17 ல் நான் நியாயத்தை நூலும் நீதியை தூக்குதலுக்குமாக வைப்பேன் என்கிறார்.

## மனவாட்டியும் வேறே ஸ்திரீயும்

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் இரண்டு விதமான சபைகளை காணலாம். அதிகாரம் 12ல் கிறிஸ்துவின் மணவாட்டி சூரியனை அணிந்து பரிசுத்தமும் உண்மையுமாய் காணப்பட்டதை காண்கிறோம். அதிகாரம் 17 இல் பொன், ரத்தினங்களால் அங்கீகரிக்கப்பட்ட வேசியான ஒரு ஸ்திரீயை குறித்து பார்க்கிறோம். இந்த வேசியான ஸ்திரீ பாபிலோனுக்கு ஒப்பிடப்படுகிறாள் ஏனெனில் கிறிஸ்துவை தேவன் என்று விசுவாசிக்காமல் அசுத்த நடக்கையினாலும் அருவருப்புகளினால் பாவம் செய்கிறாள். ஏசாயா 1 : 21 -22 உண்மையுள்ள நகரம் எப்படி வேசியாய் போயிற்று என்று இஸ்ரவேல் ஜனங்களை குறித்து சொல்லப்பட்டுள்ளது. நியாயமும் நீதியும் இருந்த இடத்தில் இன்றைக்கு அக்கிரமம் பெருகிவிட்டது. இன்றும் நம்மில் அனேகர் இப்படியே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மணவாளனுக்கு உண்மை உள்ளவர்களாக இல்லாமல் நீதியின் சால்வைக்கு பாத்திரவான்களாக எண்ணப்பட மறுக்கிறோம்.

## நீதியின் வாக்குத்தத்தங்கள்

நீதியின் சால்வை என்பது ஆசீர்வாதமான அனுபவம் நீதிக்கென்று அனேக வாக்குத்தத்தங்கள் உண்டு. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது 1 பேதுரு 3 : 12. எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் அப்போ 10 : 35. நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து 1 பேதுரு 3 : 14. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். மத் 5 : 6.

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். 2 தீமோ 4 : 7 - 8.

## நீதியின் உபதேசம்

இயேசுவின் வருகை திருடன் வருகிற விதமாய் இருக்கும் இந்த பூமி வெந்து அழியும் நாமெல்லாரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பதாக நிற்க வேண்டும். திரும்ப வரப்போகிற கிறிஸ்து மாசற்ற பரிசுத்த ஜனங்களை பரலோகில் சேர்க்க எதிர்பார்ப்போடு வருகிறார். ஆகவே நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும். 2 பேது 3 : 11 பரிசுத்தம் என்பது ஆவி, நடக்கை, தரிசனம், வார்த்தைகள், செயல்கள், கவனிக்கிற விஷயங்கள் நாம் பின்பற்றுகிற கொள்கைகள், உடுத்துகிற உடை, செல்லுகிற இடங்கள், இவையெல்லாம் உங்கள் வாழ்வில் நீதிக்கேற்ப இருக்கிறதா?

கற்புள்ள கன்னிகைக்கு உண்டான எல்லா கிரியையும் நம்மிடம் உண்டா?ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாத வர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். பேதுரு 14ம் வசனத்தில் உங்கள் கலியாண வஸ்திரம் என்ன நிலையில் உள்ளது? பாவக்கறை படித்துள்ளதா? நீங்கள் கிறிஸ்துவை பிரியப்படுத்த போகிறீர்களா? உங்களையும் உங்களை சுற்றி உள்ளவர்களை பிரியப்படுத்த போகிறீர்களா? இயேசு கிறிஸ்துவின் வல்லமையால் நீதியின் வாழ்வை உங்களால் வாழ முடியும்.

நீதியின் சால்வையை தரித்து கொள்ள உங்கள் இருதயத்தை கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுங்கள். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் 1 யோவான் 1 : 9. கர்த்தருடைய வருகை சமீபமாயிருப்பதினால் அனுதினமும் அவரை சந்திக்க ஆயத்தப்படுவோம். ■

# கேள்வி ? பதில்!

**கேள்வி : சபையின் கோட்பாடுகளை பின்பற்றுகிற ஒருவர் நீதியாய் நடக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா?**

உண்மையான நீதியின் அர்த்தம் என்ன என்பதை முதலில் சிந்திக்கவும் பல சமயங்களில் யூதர்களுக்கும் புதிதான கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்படும் சூழ்நிலைகளில் அப்போஸ்தலனாகிய பவுல் இதை கூறியிருக்கிறார். யூதர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டுள்ள கட்டளைகளையும் நியமங்களையும் பின்பற்றுவதை நீதி என்கின்றனர். .

> கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் உண்டாகும் நீதியே அல்லாமல் சபை ஒழுங்குகளைப் பின்பற்றுவதனால் அல்ல

அதேபோலதான் இன்றும் சபையில் இருக்கும் கிறிஸ்தவர்கள் சபை ஒழுங்கை கையாள்வது நீதி என்கின்றனர். பவுல் கூறுகையில் உண்மையான நீதி என்பது நம்முடைய கிரியைகளினால் உண்டாகாது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே. கலாத்தியர் 2 : 16 . தேவத்திட்டத்தில் கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே நீதி உண்டாகுமே தவிர சபை ஒழுங்குகளை பின்பற்றுவதனால் அல்ல. எவ்வளவு நேர்த்தியான கொள்கைகளாக இருந்தாலும் கூட அது இரட்சிப்பை கொண்டு வராது. நியாயத்தீர்ப்பு நேர்த்தியானது . கர்த்தருக்கு முன்பாக பிழையற்றது. அது நம்முடைய முயற்சிகளினால் கூடாதது .

மாறாக, விசுவாசத்தினால் நாம் நீதிமான்கள் ஆக்கப்பட்டும், நீதியினால் உண்டாகும் கிரியை இருதயம் சார்ந்ததாகவும் இருக்குமேயல்லாமல் வெளிப்புற தோற்றத்தில் அமையாது. வழக்கமாக ஜனங்கள் ஜெபிக்கிறார்கள். துதிக்கிறார்கள். கொடுக்கிறார்கள். நேர்த்தியான உடை அணிகிறார்கள். நற்கிரியைகளை செய்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் ஒரு மனுஷனுடைய இருதயத்தை மாற்றாதே. கர்த்தரை விசுவாசிக்காத சில பேரும் கூட இதே போல் செய்கிறார்கள். இது தெய்வீக கிருபையால் மாத்திரமே சாத்தியம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் ரோமர் 5 : 18 –21. ஒரே மனுஷனாகிய கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டோம். இந்த நீதி நம்முடைய இருதயம் மறுரூபப்படுவதினாலும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை கழுவி சுத்திகரித்து, பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் சாத்தியம். மறுரூபமாக்கப்பட்ட இருதயம் தாமாகவே தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய தொடங்கும். இவைகள் நீதியின் கனிகள். நீதியின் சால்வையைத் தரித்துக்கொண்ட நாம் நம் அனுதின வாழ்வில் தேவனை மகிமைப்படுத்துவோம். பரிசுத்தமாய் நடந்து கிறிஸ்துவின் கிருபையில் வளரக் கடவோம். எப்படியிருப்பினும், நாம் நம்முடைய கிரியைகளை அடித்தளமாக கொள்ளாமல் தேவனைச் சார்ந்து வாழ்வோம்.

ஆகவே சபை ஒழுங்குகளை கடைபிடிப்பதனால் மாத்திரம் நீதியில் நிலை கொள்ள முடிவதில்லை. மாறாக விசுவாசம், கிறிஸ்துவின் மறுரூபமாக்கும் வல்லமை இவைகளினால் இருதயத்தில் இருந்து நீதி வெளிப்படும்.

**எங்களுடைய நீதிகளெல்லாம்** அழுக்கான கந்தைபோல இருக்கிறது – ஏசாயா

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய **நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால்,** பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.–இயேசு

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் **நீதிமானாக்கப்படுவதில்லையே.**–பவுல்

நீங்களும் மனுஷருக்கு **நீதிமான்கள் என்று புறம்பே** காணப்படுகிறீர்கள்; **உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும்** நிறைந்திருக்கிறீர்கள்.–இயேசு

நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற **சுயநீதியை உடையவனாயிராமல்,** கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும் – பவுல்

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

உங்களுக்குத் தெரியுமா?

ஆராய்ச்சிகள் சொல்கிறது :–நல்லொழுக்கங்களும் ஆவிக்குரிய பழக்க வழக்கங்களும் மனரீதியான ஆரோக்கியத்தை அதிகரிப்பதோடு மன அழுத்தத்தையும் குறைக்கிறது. தனிப்பட்ட மனிதர்கள் தொடர்ந்து மதம் மற்றும் ஆவிக்குரிய நற்குணங்களை உடையவர்களின் ஆரோக்கியத்தில் நல்ல நிலையை காண முடிகிறது.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## தேவபிள்ளைகளுடைய ஆசீர்வாதம்

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.அப்போஸ்தலர் 16 : 25

மிஷனெரி பயணத்தில் தேவனுடைய பணியை தொடர்ந்து பவுலும் சீலாவும் செய்து கொண்டிருக்கையில் அடிபட்டார்கள். உபத்திரவபட்டார்கள். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் தேவனை துதித்து பாடினார்கள்.



பூமி அதிரத்தக்கதாக ஒரு சத்தம் உண்டாயிற்று, சிறைச்சாலையின் கதவுகள் திறவுண்டது. சிறைச்சாலை தலைவன் பயந்து பிரமித்தான். அனைவருடைய கட்டுக்களும் கழன்று போயிற்று. இந்த சகோதரர்கள் தங்கள் உபத்திரங்களிலும் தேவனை துதித்துப் பாடினார்கள். நாமும் கூட நம்முடைய இக்கட்டு நேரத்தில் உறவினர்களோடு சேர்ந்து தேவனை துதிப்போம்.

வாழ்க்கை வலியும் ஏமாற்றமும் நிறைந்தது. கொஞ்சம் பொறுமையோடு சகித்தால் ஒரு மகிழ்ச்சியை காண முடியும். உண்மையான மகிழ்ச்சி என்பது தடைகள் இல்லாமல் எளிதாக கிடைப்பதில்லை. அவையெல்லாம் மேற்கொண்டு ஜெயித்து வருவது தான் மகிழ்ச்சி. பல சவால்களை தாண்டி தான் உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும்.

2 கொரிந்தியர் 7 : 4 ல் பவுல் எழுதுகையில் மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன்; உங்களைக்குறித்து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன். மேலும் சங்கீதக்காரனாகிய தாவீது சங்கீதம் 31 : 7 உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன்; நீர் என் உபத்திரவத்தைப் பார்த்து, என் ஆத்தும வியாகுலங்களை அறிந்திருக்கிறீர்.கர்த்தர் நம்மோடு இருக்கிறார். ஆகவே கடினமான பாதையில் அவரே சமாதானம் கட்டளையிடுவார் .இயேசு உங்களுடைய அனைத்து விதமான போராட்டங்களையும் அறிந்திருக்கிறார். ஒவ்வொரு மனவேதனையையும் பாடுகளும் தேவனுக்கு தெரியும். இயேசுவை விசுவாசியுங்கள் உங்கள் இருதயம் மகிழ்ச்சியினால் நிரப்பப்படும் மேகங்களும் கூட உங்களை கடந்து செல்லும். நம்முடைய உபத்திரவம் நமக்கு புதிய தைரியத்தையும் நம்பிக்கையையும் புதிய பாடலையும் கற்றுத் தரும். அந்த பாடல் தரும் நம்பிக்கை விசுவாசம் புதிய எதிர்கால வெற்றிகளை தருவதாக அமையும். கடந்த காலங்களில் கர்த்தர் நம் மீது வைத்த இரக்கத்திற்காக நன்றி நிறைந்த உள்ளத்தோடு நாம் அவரை துதிப்போம். நம்முடைய இன்பமான தருணங்களில் பாடும் பாடல்களை விட துயரங்களில் உணர்ந்து பாடும் பாடல்களுக்கு வலிமை அதிகம். ஏனெனில் நம்முடைய ஆழமான விசுவாசத்தின் வெளிப்பாடு அந்த பாடல் எத்தனை சோதனைகள் வந்தாலும் அசைக்க முடியாத விசுவாசம் ஒன்றே பாடல்களை உணர்ந்து பாட செய்யும் ■

CONTACT :-

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**2 / 227 - Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316